**எனது இல:- JSC/EA/Transfers/2024**

**அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும்,**

**மாவட்ட நீதிபதிகளுக்கும்/நீதவான்களுக்கும்,**

**உயர்நீதிமன்ற பதிவாளர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளருக்கும்,**

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின்/நீதிமன்றங்களில் சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் மற்றும் கணக்கீட்டு உதவியாளர்களின் வருடாந்த இடமாற்றம் - 2024**

2023.12.31 திகதியன்று தற்போதைய சேவை நிலையத்தில் நான்கு வருடங்கள் (04) அல்லது அதற்கு மேலதிகமான சேவைக்காலத்தை பூரணப்படுத்திய உமது நீதிமன்றத்தில் சேவையாற்றும் அனைத்து அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின், நீதிமன்றங்களில் சேவையாற்றம் அபிவிருத்தி உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் மற்றும் கணக்கீட்டு உதவியாளர் பதவியில் உள்ள உத்தியோகத்தர்களின் மற்றும் தற்போதைய சேவை நிலையத்தில் 4 வருடங்கள் பூரணப்படுத்தப்படாத விசேட காரணங்களினால் விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களின் 2024 ஆம் ஆண்டிற்கான இடமாற்ற விண்ணப்பத்தை நீதிச்சேவை ஆணைக்குழுவின் இணைய முகவரியில் பிரசுரிக்கப்பட்டுள்ள link ல் உள்ள **Google Form** இற்கு அமைய பூரணப்படுத்தி **25.08.2023** ஆம் திகதி பி.ப 3.00அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அந்தந்த நீதிமன்றங்களின் திணைக்களத் தலைவரினூடாக Google Form இல் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு **“அ” மாதிரிப்படிவம்** (Specimen form “A”) ஒவ்வொரு சேவைக்கும் அமைய (நீதிமன்ற எழுதுநர் சேவை, நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சேவை……ஆகிய) சரியாக பூரணப்படுத்திய ஒரு முகப்புக்கடிதத்தினூடாக மாதிரிப்படிவத்தை சரியாக ஒட்டப்பட்ட தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“மனிதவளப் பிரிவு (HRM Division), வருடாந்த இடமாற்றம் - 2024”** என குறிப்பிட்டு செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலக காரியாலயம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட நான்கு வருடங்கள் (04) அல்லது அதற்கு மேற்பட்ட சேவை காலத்தை பூரணப்படுத்திய ஆனால் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத உத்தியோகத்தர்கள் சேவை தேவைக்கேற்ப வெற்றிடம் காணப்படும் நீதிமன்றங்களுக்கு கட்டாயமான இடமாற்றம் வழங்கப்படும் என்பதுடன், அவ்வாறான உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது என நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. இடமாற்றத்தை கோரும்போது உத்தியோகத்தர்களின் மூலம் தமது விருப்பத்தின் அடிப்படையில் கட்டாயமாக மூன்று (03) சேவை நிலையங்கள் பெயரிடப்படல் வேண்டும். **கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகம் தவிர்ந்த ஒரே நீதிமன்ற வளாகத்தினுள் அமைந்துள்ள நீதிமன்றங்களை வேறு வேறு நிலையங்களாக பெயரிடப்படக் கூடாது** என்பதுடன் அதேபோல தற்போதைய சேவை நிலையம் அமைந்துள்ள நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்ற வளாகத்தில் வேறு நீதிமன்றத்தினையும் பெயரிடப்படக்கூடாது (**கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகம் தவிர்ந்த ஒரு நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஒரே சேவை நிலையமாக கருதப்படும்.)**

**விண்ணப்பிக்கும் முறை தொடர்பான உதாரணம்:-**

**மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் சேவை ஆற்றும் உத்தியோகத்தரின் தெரிவு**

1. தங்காலை நீதிமன்ற வளாகத்தின் ஒரு நீதிமன்றம்
2. காலி நீதிமன்ற வளாகத்தின் ஒரு நீதிமன்றம்
3. தெய்யந்தரை நீதவான் நீதிமன்றம்

**<u>தெல்தெனிய மாவட்ட/நீதவான் நீதிமன்றத்தில் சேவை ஆற்றும் உத்தியோகத்தரின் தெரிவு</u>**

1. கண்டி நீதிமன்ற வளாகத்தின் ஒரு நீதிமன்றம்
2. கம்பளை மாவட்ட/நீதவான் நீதிமன்றம்
3. நாவலப்பிட்டி மாவட்ட/நீதவான் நீதிமன்றம்

அதன்படி மேலே 03 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்திற்கு எதிர்மாறாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் மேலே 02ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட முறையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

4. (அ) 2023 ஆம் வருடத்திற்கான வருடாந்த இடமாற்றத்தை வழங்கும் பொழுது குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதிமன்ற எழுத்தாளர், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர், நீதிமன்ற தட்டெழுத்தாளர் மற்றும் நீதிமன்ற புத்தக கட்டுநர் ஆகிய பதவிகளுக்கமைய சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள விசேட நிலைமைகளை கருத்திற்கொண்டு தாம் வசிக்கும் பிரதேசத்திற்கு வெளியே 04 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் தமது நிலையான வசிப்பிட பிரதேசங்களுக்கு வழங்குவதற்கமைவாக நீதிச்சேவை ஆணைக்குழு விசேட அவதானத்தை செலுத்தியுள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றத்தை வழங்கும்போது ஏற்படும் சேவை முக்கியத்துவம் மற்றும் மாற்று உத்தியோகத்தர் தேவைப்பாட்டிற்கு அமைய இடமாற்றத்திற்காக அதிக தேவைப்பாடு காணப்படும் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் கீழ் காணப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

**4.1. நீதிமன்ற எழுதுநர் மற்றும் நீதிமன்ற புத்தக கட்டுநர் (இரத்தினபுரி அல்லது பதுளை மாவட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் அலுவலர்களுக்காக மாத்திரம்)**

இரத்தினபுரி அல்லது பதுளை மாவட்டத்தினை நிரந்தர வசிப்பிடமாக கொண்டிருக்கின்ற போதிலும் 31.12.2023 ஆம் திகதிக்கு 08 வருடங்கள் அல்லது அதற்கு மேலதிகமான காலத்தை இரத்தினபுரி அல்லது பதுளை மாவட்டத்தினுள் (தேவைக்கேற்ப) நீதிமன்றத்தில்/நீதிமன்றங்களில் சேவையாற்றிய போதிலும் தான் வசிக்கும் மாவட்டத்தினுள்ளே அமைந்துள்ள நீதிமன்றமொன்றில் சேவையாற்றி உள்ள 55 வயதை அடையாத உத்தியோகத்தர்கள் மற்றும் 31.12.2023 ஆம் திகதிக்கு சேவை காலம் 8 வருடத்திற்கு குறைவாக இருப்பினும் இரத்தினபுரி அல்லது பதுளை மாவட்டத்தினுள் நிரந்தர வசிப்பிடம் இருந்த போதிலும் அந்த மாவட்டத்தினுள்ளே (தேவைக்கேற்ப) அமைந்துள்ள நீதிமன்றம் ஒன்றிற்கு முதல் நியமனம் பெற்று 55 வயதிற்கு மேற்படாத உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் பொழுது இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு வெளியே 02 நீதிமன்றங்களை தெரிவுசெய்து பெயரிடப்படல் வேண்டும்.

**4.2. நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் மற்றும் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (தென்மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் அலுவலர்களுக்காக மாத்திரம்)**

தென் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமாக கொண்டிருக்கின்ற போதிலும் 31.12.2023 ஆம் திகதிக்கு 08 வருடங்கள் அல்லது அதற்கு மேலதிகமான காலத்தை தென் மாகாணத்தினுள் நீதிமன்றத்தில்/நீதிமன்றங்களில் சேவையாற்றிய போதிலும் தான் வசிக்கும் மாவட்டத்தினுள்ளே அமைந்துள்ள நீதிமன்றமொன்றில் சேவையாற்றி உள்ள 55 வயதை அடையாத உத்தியோகத்தர்கள் மற்றும் 31.12.2023 ஆம் திகதிக்கு சேவை காலம் 8 வருடத்திற்கு குறைவாக இருப்பினும் தென் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடம் இருந்த போதிலும் அந்த மாகாணத்தினுள்ளே அமைந்துள்ள நீதிமன்றம் ஒன்றிற்கு முதல் நியமனம் பெற்று தற்போதுவரையில் தென்மாகாணத்தினுள் சேவையாற்றும் 55 வயதிற்கு மேற்படாத உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் பொழுது கட்டாயமாக தென் மாகாணத்திற்கு வெளியே 02 நீதிமன்றங்களை தெரிவுசெய்து பெயரிடப்படல் வேண்டும்.

(ஆ) மேற்கூறப்பட்ட 4:1 மற்றும் 4:2 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனைத்து உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு அமைவாக அவர்களின் தனிநபர்கோவை பரீட்சிக்கப்பட்டு நீதிமன்றத்தின் பதிவாளர் மற்றும் திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) மேற்கூறப்பட்ட 4:1 மற்றும் 4:2 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத உத்தியோகத்தர்கள் சேவை தேவைப்பாடு மற்றும் வெற்றிடங்களை கருத்திற் கொண்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள நீதிமன்றம் ஒன்றிற்கு இடமாற்றம் பெறுவதற்கு உட்படுவர்.

5. இக் கடிதத்தின் அறிவுறுத்தல்களிற்கு அமைவாக இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்படுவதுடன் அவர்களினால் கோரப்படும் சேவை நிலையத்தினை வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் சேவை தேவைப்பாட்டிற்கு அமைய நீதிச்சேவை ஆணைக்குழுவினால் ஏதுவான சேவை நிலையம் வழங்கப்படும்.

6. தற்போது வேறு நீதிமன்றங்களுக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் **<u>நிரந்தர சேவை நிலையத்தின் திணைக்களத் தலைவரினூடாக மாத்திரம்</u>** இடமாற்றத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

7. தமது கணவன்/மனைவி நீதிமன்றத்தில் சேவையாற்றுவார்களாயின் அவ்வாறான எந்தவொரு உத்தியோகத்தரும் கணவன்/மனைவி சேவையாற்றும் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கலாகாது.

8. **<u>இடமாற்றம் வழங்குவதற்கான படிமுறை</u>**

நிகழ்காலத்தில் நீதிமன்றங்களில் சேவையாற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் தீவிர குறைபாடு காரணமாக மனிதவள முகாமைத்துவத்தில் ஏற்படும் அசௌகரியமான நிலைமையை தடுப்பதற்காக நீதிமன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வழங்கி முடியுமான அளவு உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான தேவைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

9. குறிப்பிட்ட தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

எச்.எஸ். சஞ்ஜீவ சோமரத்ன
செயலாளர்
நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்

கொழும்பு 12
நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்திலிருந்து
2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி